## சுருக்கம்

நிர்வாகம் – மருந்து கட்டுப்பாடு துறை – மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் நடமாடும் குழு, மதுரை அலுவலகம் செயல்படும் தனியார் கட்டடத்திற்கு மாத வாடகையாக ரூ.20,000/– என 12.09.2012 முதல் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல (எம்1) துறை

அரசு ஆணை (வாலாயம்) எண்.818

நாள் 11.07.2014
ஜய ஆனி, 27
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க

மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 12249/தணி/1/12, நாள் 18.02.2013, 15.04.2013 & 31.07.2013.

---

ஆணை:–

மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர், மதுரை உதவி இயக்குநர் நடமாடும் குழு அலுவலகம் செயல்படும் தனியார் கட்டடத்திற்கு மாத வாடகையாக ரூ. 20,000–ஐ 12.09.2012 முதல் ஒப்பளிப்பு அளித்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மருந்துக் கட்டுப்பாடு இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. அதன்படி, மதுரை உதவி இயக்குநர் மருந்து கட்டுப்பாடு நடமாடும் குழு அலுவலகம் செயல்படும் தனியார் கட்டடத்திற்கு மாத வாடகை ரூ. 20,000/– என 12.09.2012 முதல் நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது. மதுரை உதவி இயக்குநர், மருந்துக் கட்டுப்பாடு நடமாடும் குழு அலுவலகம் செயல்படும் தனியார் கட்டடத்திற்கு மாத வாடகையை வீட்டு உரிமையாளருக்கு பெற்று வழங்கிட உதவி இயக்குநர் மருந்துக் கட்டுப்பாடு நடமாடும் குழு, மதுரை அவர்களுக்கு இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படுகிறது.

3. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 06 பொதுச் சுகாதாரம் – 104. மருந்துப் பொருள் கட்டுப்பாடு – I திட்டத்தில் சேராதது – AA. 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள் சட்ட நிர்வாகம் – 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் – 01. வாடகை."
(த.தொ.கு. 2210 – 06 – 104 – AA – 0613)

4. இவ்வாணைக்கு பொதுப்பணித்துறை அ.சா.கு. எண். 26163/H1/2013, நாள் 23.10.2013 மற்றும் நிதித்துறை அ.சா.கு.எண். 61298/H1/2013, நாள் 29.10.2013 இசைவளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசுச் செயலாளர்

பெறுநர்:

மருந்துக் கட்டுப்பாடு துறை, சென்னை – 6.
மருந்துக் கட்டுப்பாடு, உதவி இயக்குநர், நடமாடும் குழு, பிளாட் எண். 22, அண்ணா நகர், மதுரை – 20.
மாநில கணக்காயர் – சென்னை – 18/35.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.

நகல்:
நிதி (சு1) த்துறை, சென்னை – 9.
பொதுப் பணித் துறை, சென்னை – 9.
இ.கோ. உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்